உ

கடவுள் துணை.

மலையனூர்

அங்காளம்மன்பேரில் பதிகம்.



சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களாற்றமது

திருமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

25

புத்தக விளம்பரம்

	ரூ.	அ.
சின்மயதீபிகை	0	8
முக்திசோபானம் 23 யோகாசனப்படங்களுடன்	0	12
பகவத்கிதை கிரந்தஸ்லோகம், தமிழ் ஸ்லோகம், தமிழ் தாத்பர்யத்துடன் கூடியது பாகெட்சைட்	1	0
ஞானத்திரட்டு, இதில் விவேகாநந்தரது பக்தி யோகம், கர்மயோகம், ஞானயோகம், இவைகளின் தமிழ்மொழி பெயர்ப்பு இரண்டு பாகங்களடங்கியது	1	0
தத்துவதரிசினி 1-ம் பாகம்	0	10
ஞானதரிசினி 2-ம் பாகம்	0	10
பரமபத மார்க்கம்	0	8
சுத்தநிராலம்ப மார்க்கம்	0	4
ஸ்ரீ கிருஷ்ண போதாம்ருத மென்னும் பன்னிரண்டுஇராஜர்கள் கதை	0	12

விலாசம்:—

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்
புத்தக வியாபாரிகள், பார்க் டவுன், சென்னை.

கடவுள் துணை.

மலையனூர்

அங்காளம்மன்பேரில் பதிகம்.

சீர்வளரும் மலையனூர் வந்துவன்பத்தாறுதேச மெங்கும்நிறைந்தார், திரளானசெல்வமும் மைந்தரும்விஜயமும் சேர்ந்தவடியார்களிப்பாய், தருமதுரையாதிவீரிரணவீரபத்ரனும்சதிரானயிருளப்பனும் சகலவிஜயமும்பெற்ற பாவாடைராயனும் தனதுபரிவாரமுடனே, அருமைவளர்பூதகண நாதர்புடைசூழவே அன்பாய்க்கொலுவிருப்பாய், ஆயிசுந்தரிவிமலி அம்பிகையலங்காரி அங்கையணியுங்கபாலி, பொருதுமடியார்கள்தன் பிணிபறந்தோடிட விபூதியருடாங்காளியே, பூங்காவினீழலுரை ஒங்காரசத்தியே பூங்காவனத்தாயியே. 1

பாதச்சிலம்பு சதங்கையொடு வெண்டயம்பாடகத்தொனியினழகும், பட்டாடை யணியிடையில்

ஒட்டியாணமரையினிற்பளபளப்பின்னலழகும், சித்தாங்குகளபகஸ்தூரி ஜவ்வாது சந்தனம்சேர் முலைக்கச்சினழகும், செங்கையிற்கடகமும் நவரத்னமணி வயிரமும்சூட்டுமதி னெத்தினழகும், மேதினியை விலைகொண்ட கண்டசரமங்கிலியம் மேவுமுத்தணியி னழகும், மிருதுவசனமும் கொந்தளக்காதினெடு கொப்புமிகபங்கயத்தினழகும்,பொதுகொண்டுபணியுமடியார்கள் முன்வந்தருள்புரிந்தருளும் அங்காளியே, பூங்காவினீழலுரை ஓங்காரசத்தியே பூங்காவனத்தாயியே. 2

வாமிநீ காமிநீ மால்சிவனுமயனுநீ மகிமைபெறு காமாட்சிநீ,மங்கைசிவகாமிநீ மாயவன்றங்கைநீ மன்னுமருவங்கிவெளிநீ, கோமளஸ்வரூபிநீ இரவுநீ பகலுநீ குருநமசிவாயமுநீ, கூத்தாடுமீசனெடு கூத்தாடுங்காளிநீ குலவுபர சிவனும்நீயே; ஓமந்த்ரரூபிசங்காரீங்காரியே ஒருகையிற்கபாலமும், ஒருகையிற்சூலமும்ஒருகையிற்பம்பையுகொண்டுவந்தென்னுளுமே, பூமிதனிலடியார்கள் வினைதீர்த்துவாழ்வுதரும் புண்ணியம்பெருஞ்செல்வியே, பூங்காவினீழலுரை ஓங்காரசத்தியே பூங்காவனத்தாயியே. 3

மாலையனுமீசனும் முப்பத்துமுக்கோடிவானவரும் மாமுனிவரும், வருதிக்குபாலரும் வசுக்களும் வயிரவரும் வாழ்பஞ்சபாண்டவர்களும், மேலான சாதனும் கௌரிமுக்கண்ணியும் வேழமுகவர்க்கிளையனும், மெல்லியர்கள்சத்தமாதர்களும்வெண்டுபுகழ் மாரிமுத்தும், கோலாகலத்துடன் வுந்தனிடகொலுவுதனில் கொண்டாடிவந்துநிற்பாய், குலவியஅவர்க்கெலாம்பெருமையாய் உன்மகிமை கூறுதற்கெளிதாகுமோ, பூலோகம்கலியுகம் தன்னிலேயில்லாத புதுமையினிவேறுமுண்டோ, பூங்காவினீழலுரை ஓங்காரசத்தியே பூங்காவனத்தாயியே. 4

அத்தரும்புகழ்கின்ற தேவியுன்சன்னிதியில் ஆருறுவந்துபணிவார், அயிராணிரம்பையர்கள் ஆதித்தனம்புவியோடங்கியெமனிருதிவருணன், முத்துக்காருப்பவண்ணக் குபேரனிவர்கள் முப்பத்துமுக்கோடிதேவரும், முன்றந்தவான்மனம் நினைத்தவரமருள்கின்ற முதல்வியுன்செயல்வராதாம், யுற்றதுணை நீயெனக்கல்லாமல்வேறில்லை நானொருபிள்ளைதானல்லவோ, உன்சித்தமென்பாக்கியம் நம்பினேன் நம்பினேனுனமனமிதங்கியேதான், புத்தியில்லாதநாயடி

யேனையாளுவது புண்ணியமுனக்கேவரும், பூங்காவி னீழலுறை ஓங்காரசத்தியேபூங்காவனத்தாயியே. 5

முகமாயிரங்கை யிரண்டாயிரத்தொடு முனை கொண்ட படைதாங்கியே, மூவுலகுகொண்டாடும் ரணவீரபத்திரனு மொருபடையிருளப்பனும், செக மெலாங்கொண்டாடும் பாவாடைராயனும் செல்வி காட்டேரியுமையும், சிரானஉந்தனிடசேனைபரிவார மும்சிறப்பாகவேசூழநீ,யகமகிழும்எந்தன்மனைதன் னில்வந்தேநீ யமைந்தேயிருக்கவினைக, ளகலாதிருக் குமோ முன்சென்மந்தன்னிலே யான்செய்தகுறை யேதம்மா, புகழ்பரவுமுகசவுந்த்ர பூரணவலங்காரி பூங்காவியணிபூஷணி, பூங்காவினீழலுரை ஓங்கார சத்தியே பூங்காவனத்தாயியே. 6

வாதினெமெடுபில்லி சூனியம்யேவலொடுவை ப்புதலையெரிவுகுட்டம், வருகுமைம்பீனிசைகுடைச் சல்வெப்பிரும்பலொடு வஞ்சனை செய்பித்தகாசம், தீதுபுரிகிரகாதிதோஷங்கள் முன்செய்ததீவினைகளி துகளெல்லாம்,தேவியுன்பேர்சொல்லசூரியன்கண்ட பனிசெய்கைபோலாகுமம்மா,மாதவன்சகோதரிவல் லாளனைக்கொன்ற வல்லவிசூலாதரி, மாதேவிசடலை

தனில்நடமாடுமுத்தண்டிவராகிமந்த்ரரூபி, பூங்காவி
னீழனுரை ஒங்காரசத்தியே பூங்காவனத்தாயியே.7

எல்லைப்பிசாசுகள் கொல்லைப்பிசாசுகள் யிளக
மூவடியில்வீரன், எதிருஞ்சடாமுனிகள் பிரம்மரா
க்ஷதிகளும்யிடும்புசெய்குட்டிசாத்தி, புல்லறிவுமோ
கினிரத்தசாதமுண்டியொடு பூதவேதாளமெல்லாம்,
விபூதிகொண்டெறியவே அலறியேவோடிடும் உன்
புதுமையெவரும்புகழ்வார், கல்லாதநாயினேன்செய்
தபிழைபொறுத்து கடாக்ஷண்யமருள்காரணி,சகல
பரிபூரணி நாரணி யாரணிகாமியபிராமிவாமி,பொல்
லாதலோபர்தம் பக்கஞ்சென்றவர்களை போற்றுமல்
வாழ்வுதருவாய், பூங்காவினீழனுரை ஒங்காரசத்தி
யே பூங்காவனத்தாயியே. 8

தந்திரமறியே னுரைசெய்மந்திரமறியேன் மிகு
தவங்களொடுதேகமறியேன், தன்மலரெடுத்தடியில்
வர்ச்சிக்கவறிகிலேன் சம்ப்ரதாயங்களறியேன், சிந்
தையுறுபத்தியாய் போற்றவறியேனுனது செந்தமி
ழையோதவறியேன், சித்தம்வைத்தாளுவதுஉந்தனு

க்கேகடன் செப்பியான்யென்செய்குவேன், சந்திர சேகரகௌரிஜடாதரிமுக்கண்ணிசாம்பவிவராகிநீலி, தாயிமகம்மாயி சதுர்வேதகிருபாகரி சாமுண்டிமக பாலி புத்திமகிடன்வாழ முத்திதாண்டவஞ்செய்த பூம்பாதகமலநிமலி, பூங்காவிநீழலுறை ஓங்காரசத்தியே பூங்காவனத்தாயியே. 9

உலகில்புகழாகமம் முனியோர்களறிகின்றவறுபத்துநாலுகலையு, மானதொண்ணூற்ருறு தத்துவம் பதினெண்புராணமு மாரணங்களும், நலமுள்ளநான்மறைப்பொருள்ஞானமாய்நின்றநாயகியுன்செவிக்கு, நான்சொல்லும்புன்சொலின் பிழைபொறுத்துனது மனம்நயமாயுகந்தருளுவாய,கமலசுறநீலிகிருபாசுகரம்பணிபசுந்தொளிர் கனிமதுரமிருதுபாணி, காசினியோர்கொண்டாடு மம்மைசிவகாமியே கருணையுளவாங்காளியே, புலவர்பணிபாதார விந்தத்திநாதசிதபோதத்தயங்காளியே, பூங்காவினீழலுரை ஓங்காரசத்தியே பூங்காவனத்தாயியே. 10

மலையனூர் அங்காளம்மன்பேரில்பதிகம்

முற்றிற்று.